**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>**

**முன்னிலை: செல்வி. மு.அபிநயா., B.A.B.L.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2023–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22–ம் நாள் புதன் கிழமை,

**இ.ம.எண்.11/2023 in அ.வ.எண்.220/2017**

---------

1. வைரம்மாள்
2. ராஜ்குமார்
3. ராம்குமார் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. வேலாயுதம் (இறந்துவிட்டார்)
2. மதியழகன்
3. செல்வி
4. ராஜேஸ்வரி
5. சௌந்தராஜன்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

6. ரெங்கராஜன்
7. சந்திரசேகர்

...உத்தேச எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு 15.11.2023–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றம் முன்பு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மதியழகன் அவர்கள் முன்னிலையாகியும், 2 முதல் 4ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மணிகண்டன் அவர்கள் முன்னிலையாகியும், 5ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ரமேஷ் நடராஜன் அவர்கள் முன்னிலையாகியும், 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.ஹரிபாஸ்கர் அவர்கள் முன்னிலையாகியும், 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சிலம்பரசன் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்

இறந்துவிட்டநிலையிலும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரை, இந்நீதிமன்ற ஆய்விலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்...

**<u>உத்தரவு</u>**

**1.** மனுதாரர்கள் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 1 விதி 10(2)ன் கீழ் மனுவில் கண்ட நபர்களை 6 மற்றும் 7 பிரதிவாதிகளாக சேர்த்திட அனுமதித்து உத்தரவிடக் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 1 விதி 10(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் என்றும், மேற்படி வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இவ்வழக்கை மனுதாரர்களின் மாமனாரான வேலாயுதம் அவர்களை 1ம் பிரதிவாதியாகவும், மனுதாரர் கணவரை 2ம் பிரதிவாதியாகவும், மனுதாரர் கணவரின் சகோதரிகளை 3 மற்றும் 4 பிரதிவாதிகளாகவும், மனுதாரர் கணவரின் சகோதரரை 5ம் பிரதிவாதியாகவும் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் மேற்படி 5 மற்றும் 3ம் பிரதிவாதிகள் அவர்களுக்கு ஏற்பட்டதாக கூறப்படும் தானசெட்டில்மெண்ட்

ஆவணப்படிக்கு உரிமையுள்ளதாக கூறி வழக்கு சொத்துக்களின் பகுதியை பொருத்து 3ம் பிரதிவாதி 23.07.2021ம் தேதியும், 5ம் பிரதிவாதி 07.07.2022ம் தேதியும் விற்பனை ஆவணங்கள் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

4. தற்போது மேற்படி 5 மற்றும் 3ம் பிரதிவாதிகளிடம் வழக்கு சொத்தின் பகுதியை கிரையம் பெற்ற ரெங்கராஜன் என்பவரும், சந்திரசேகர் என்பவரும் கடந்த வாரம் வழக்கு சொத்திற்கு வந்து, தங்களுடைய சொத்து என்றும், கார்சாகுபடி பணிகளை மேற்க்கொள்ளக்கூடாது என்றும் மிரட்டிச்சென்றார்கள் என்றும் இவ்வாறான சூழ்நிலையில் 5 மற்றும் 3ம் பிரதிவாதி சொத்துக்களை விற்றுவிட்டதால் அவர்களுக்கு எதிராக மனுதாரர்கள் தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற்றாலும் கூட மேற்படி கிரையம் பெற்றவர்களால், மனுதாரர்களுக்கு வழக்கு சொத்தின் சுவாதீனத்தை பொருத்து தொடர்ந்து இடையூறு ஏற்படும் என்றும், அதனால் அவர்களும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

5. அதனால் மேற்சொன்ன நபர்களை இம்மனுவில் 6 மற்றும் 7 பிரதிவாதியாக சேர்க்கப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் இல்லாவிடில் மற்றொரு வழக்கு தாக்கல் செய்யும் சூழலும் ஏற்படும் என்றும் அதனால் மனுதாரர்கள் இம்மனுவை ரெங்கராஜன் மற்றும் சந்திரசேகர்–ஐ 6 மற்றும் 7 பிரதிவாதிகளாக சேர்த்திட அனுமதித்து உத்தரவிடக் கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மேற்படி நபர்களை பிரதிவாதிகளாக வழக்கில் சேர்த்திட அனுமதித்து

உத்தரவிட வேண்டியது அவசியமாகும் என்றும் இல்லாவிடின் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும் என்றும் எனவே மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

6. 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் இந்த மனு சத்தியப்படிக்கும் பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் மனுதாரர்கள் தூய கரங்களுடன் கனம் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும் மனுவின் நெடுந்தலைப்பில் 5ம் எதிர்மனுதாரரின் பெயர் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் அதனை பொருத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த மனுவை 1ம் வாதி மட்டுமே தாக்கல் செய்துள்ளார் என்றும் மற்ற வாதிகள் பற்றி இந்த மனுவில் சொல்லவில்லை என்றும் அதனால் மற்ற வாதிகள் இந்த மனுதாரர் சொல்லியுள்ள சங்கதிகளை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையே கருதிக்கொள்ள வேண்டும் என்றும் மற்ற வாதிகளே இந்த மனுவை ஏற்றுக்கொள்ளததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் இந்த எதிர்மனுதாரர்கள் எதிர்வழக்குரை மற்றும் Counter claim தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மனுதாரர் கூறுவதை போல் 3 மற்றும் 5ம் எதிர்மனுதாரர்கள் மேற்படி தேதியில் விற்பனை பத்திரம் யாருக்கும் எழுதிக்கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு எழுதிக் கொடுத்ததாக கூறுவது பொய் என்றும் அவ்வாறு எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இந்த எதிர்மனுதாரர்களுக்கு இல்லை என்றும் இன்று வரை வழக்கு சொத்துக்களின் உரிமைமூலம் மற்றும் சுவாதீனம் இந்த எதிர்மனுதாரர்களிடமே உள்ளது என்றும் வழக்கு சொத்தின் சுவாதீனம்

ஒரு நாளும் மனுதாரர்களிடம் இருந்ததே இல்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

7. 6ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு சட்டப்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் இம்மனு ஆரம்ப காலக்கட்டத்திலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் உண்மையில் இந்த 6ம் எதிர்மனதாரர் 3ம் பிரதிவாதியிடமிருந்து அவருக்கு சட்டப்படி பாத்தியப்பட்ட சொத்தை சரியான பிரதிபலனுக்கு முறையாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணங்களின் படி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றும் ஆகையால் மேற்படி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் 6ம் எதிர்மனுதாரரை வழக்கின் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமோ, சட்டப்படியான தேவையோ எழுவில்லை என்றும் மேலும் இவ்வெதிர்மனுதாரருக்கும், மேற்படி வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதாலும், மேலும் 6ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்பதாலும் 6ம் எதிர்மனுதாரர் தன்னை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் அதனால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

8. 7ம் எதிர்மனுதாரர் தரப்பில் 7வது உத்தேச எதிர்மனுதாரரை இந்த வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமான சூழல் எழவில்லை என்றும் இந்த வழக்கில் 7வது உத்தேச எதிர்மனுதாரர் தேவையற்ற தரப்பினர் ஆவார் என்றும் தாவா சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்ற 7வது உத்தேச எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தை தனது

அனுபவத்திலும் சுவாதீனத்திலும் வைத்துள்ளார் என்றும் வாதிகள் இந்த 7 வது உத்தேச எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற சொத்தின் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இல்லை ஆகையால் இந்த 7 வது உத்தேச எதிர்மனுதாரருக்கு எதிராக எந்த வழக்குமூலமும் ஏற்படவில்லை என்றும் மேலும் 7 வது உத்தேச எதிர்மனுதாரரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவிற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும் இந்த மனு அசல் வழக்கினை இழுத்தடித்து காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒன்றாகும் என்றும் எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

9. மனு, எதிர்மனுவுரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. வழக்காவணங்களை ஆராய்ந்ததில் வழக்கானது மனுதாரர்களை சட்டப்படி அன்னியில் தாவா சொத்தில் இருந்து வெளியேற்றக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்தின் ஒரு பகுதியை 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் விற்பனை ஆவணம் மூலம் உத்தேச எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்படுத்தி உள்ளார்கள் என்றும் எனவே உத்தேச எதிர்மனுதாரர்கள்/6 மற்றும் 7 ம் எதிர்மனுதாரர்கள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

10. வழக்காவணங்களை ஆராய்ந்ததில் 3 மற்றும் 5 ம் பிரதிவாதிகள் வழக்கு நிலுவையில் இருக்கும் போது தான் தாவா சொத்தின் ஒரு

பகுதியை விற்பனை செய்துள்ளார்கள் என்றும் மேற்படி கிரயம் சொத்துரிமை மாற்றுச் சட்டம் பிரிவு 52ன் படி பாதிப்படைகிறது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் உத்தேச எதிர்மனுதாரர்கள்/6 மற்றும் 7 எதிர்மனுதாரர்கள்/3, 5 பிரதிவாதிகளின்/எதிர்மனுதாரர்கள் உரிமையின் அடிப்படையில் தான் உரிமைகோர முடியும் என்றும் எனவே 3, 5 பிரதிவாதிகளுக்கு எதிராக தீர்ப்பானது வழங்கப்பட்டால் அது உத்தேச எதிர்மனுதாரர்களையும் கட்டுப்படுத்தும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

11. மேலும் மனுதாரர்களின் வழக்கானது மனுதாரர்கள் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றும் அதை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்கிறார்கள் என்பதே ஆகும். மனுதாரர்களின் கட்சிப்படி மனுதாரர்கள் தங்கள் சுவாதீனத்தை நிரூபிக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பானது உத்தேச எதிர்மனுதாரர்களையும் கட்டுப்படுத்தும் என்றும் எனவே அவர்களை வழக்கில் ஒரு தரப்பினனாக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட பரிசீலனையின் அடிப்படையில் நீதியின் நலன் கருதி இம்மானுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது.

**முடிவாக,** இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு 2023–ம் ஆண்டு நவம்பர் மாதம் 22–ம் நாள் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில்

தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>

இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>

இல்லை

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மை நகல்/

M ABINAYA
Digitally signed by M ABINAYA
Date: 2023.11.22 18:03:03 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.